மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சூலூர்

அ.வ.எண்.**334/2017**

பெயர் திரு. மந்திரயப்பன் (வா.சா.1)

| | |
|---|---|
| தந்தை பெயர் | சமயம் |
| கிராமம் | தொழில் |
| தாலூக்கா | வயது |

<u>நாள் - **05-01-2021**</u>

சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி

செஞ்சேரிபுத்தூர் கிராம ஊராட்சி வாக்காளர் பட்டியலில் உள்ள வரிசை எண்.358 ல் உள்ள மந்திரயப்பன் நான் தான் என்றால் சரிதான். என் மனைவி பெயர் மீனாம்பாள் என்றால் சரிதான். அவரின் பெயர் வரிசை எண் 357 ல் உள்ளது. எனது மகளின் பெயர் அருண்பிரியா என்றால் சரிதான். மந்திரியப்பன் கவுண்டர் என்பவரை பற்றி எனக்கு தெரியும். அவருடைய மனைவியின் பெயர் ராமாத்தாள் என்றால் சரிதான். அவரை ஊர்பெரியம்மா என்று அழைபோம். மந்திரியப்பன் என்பவர் மகன் பெயர் செல்லமுத்து என்றால் சரிதான். கருப்பசாமி என்பவரின் அப்பா பெயர் செல்லமுத்து கவுண்டர் என்று வாக்களார் பட்டியலில் உள்ளது என்றால் சரிதான். அவரின் பெயர் பட்டியல் வரிசையில் 423 ல் உள்ளது என்றால் சரிதான். மந்திரியப்ப கவுண்டர் அப்பாவின் பெயர் செல்லப்ப கவுண்டர் என்றால் சரிதான். அவரின் மனைவியின் பெயர் ராமாத்தாள் என்று பட்டியலில் உள்ள புகைப்படத்தில் இருந்து என்னால் அடையாளம் சொல்ல இயலவில்லை. மந்திரியப்பர் மகன் பெயர் செல்லமுத்து என்றால் சரிதான். அவரின் பெயர் வாக்காளர் பட்டியலில் 428 ஆக உள்ளது என்றால் சரிதான். கந்தசாமி கவுண்டர் மனைவியின் பெயர் வேலாத்தாள் என்றால் எனக்கு தெரியாது. நான் என் முதல் விசாரணையின் ஆரம்ப கட்டத்தில் கருப்பசாமி மற்றும் கந்தசாமி கவுண்டருக்கு மந்திரியப்பர் சகோதரர் என்று சொல்லியுள்ளேன் என்றால் எனக்கு ஞபாகம் இல்லை. கந்தசாமி கவுண்டர் தெரியும் என்றும், நான் வழக்குக்காக வேண்டும் என்றே மறைக்கிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்க்ல் செய்த பட்டா பாஸ்புக்கில் உள்ள புகைப்படத்தில் இருப்பவரும் வாக்காளர் பட்டியலில் உள்ள புகைப்படமும் மந்திரியப்ப கவுண்டருடையது என்றால் சரிதான். வாக்காளர் பட்டியலில் உள்ள மந்திரியப்ப கவுண்டர் தகப்பனார் செல்லப்பகவுண்டர் என்று உள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த பட்டா பாஸ்புக்கில் மத்திரியப்ப கவுண்டர் தகப்பனார் அருணாச்சல கவுண்டர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.6-யை எழுதி கொடுத்தவரின் பெயர் கருப்பசாமி கவுண்டர், மத்திரியப்ப கவுண்டர் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் கையொப்பம் கருப்பசாமி மற்றும் மந்திரியப்ப கவுண்டரின் கையொப்பம் என்றால் சரிதான்.

இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு கவியட் நோட்டீஸ் மந்திரியப்ப கவுண்டர், கருப்பசாமி கவுண்டர் ஆகியோருக்கு அனுப்பப்பட்டு என்னால் பெறப்பட்டது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் கையொப்பம் என்னுடையது தான் என்றால் சரிதான். கருப்பசாமி கவுண்டர் என்ற பெயர் அருகில் உள்ள கையொப்பம் கருப்பசாமி கவுண்டர் என்பவர் செய்தார் என்றால் எனக்கு தெரியாது. நான் என் முதல் விசாரணையில் பிரதிவாதி எனக்கு கவியட் மனு அனுப்பி வைத்தார் என்றும், கையொப்பத்தை கருப்பசாமி என்பவர் செய்தார் என்றும் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.6 மற்றும் ஒப்புகை அட்டையில் உள்ள கையொப்பம் கருப்பசாமி என்பவருடையது தான் என்றால் எனக்கு தெரியாது. நான் வழக்குக்காக கருப்பசாமி என்பவரின் கையொப்பம் தெரியாது என்று மறைக்கிறேன் என்றால் சரியல்ல. நான் கிரையம் வாங்கும் முன்பு தாவா சொத்தானது யார் பெயரில் இருந்தது என்பதற்கான ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் கிரையம் வாங்கியதற்கு ஆதாரமாக வா.சா.ஆ.2, வா.சா.ஆ.3 தாக்கல் செய்துள்ளேன் என்றால் நான் கிரையம் வாங்கியதற்கான ஆவணத்தை தாக்கல் செய்யதுளளேன். என்னிடம் காட்டப்படும் ஆவணம் நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.2 கருப்பசாமி பெயரிலுள்ள 05.10.2001 ம் தேதியிட்ட பட்டா மற்றும் வா.சா.ஆ.3 மந்திரியப்ப கவுண்டர் பெயரிலுள்ள 05.10.2001 ம் தேதியிட்ட பட்டா ஆகும் என்றால் சரிதான். மேற்சொன்ன ஆவணங்களை அடிப்படையாக வைத்து தான் கிரையம் பெற்றேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 ல் ஒட்டப்பட்ட புகைப்படத்தில் இருப்பவர் கருப்பசாமி என்றால் சரிதான். ஆனால் வாக்காளர் அடையாள அட்டையில் இருப்பவர் யார் என்பதை என்னால் அடையாளர் காட்ட முடியவில்லை. வா.சா.ஆ.2 மற்றும் 3 ல் ஒட்டப்பட்ட புகைப்படத்தில் இருப்பவர் கருப்பசாமி, த/பெ.செல்லசாமி மற்றும் மந்திரியப்பர்,த/பெ.செல்லப்ப கவுண்டர் என்றும், மேற்சொன்ன இரண்டு ஆவணங்களையும் தனது செல்வாக்கை பயன்படுத்தி பெறப்பட்டது என்றால் சரியல்ல. நான் தாவா சொத்தை கிரையம் வாங்கும் முன்பு கிரைய ஆவணத்தை படித்து பார்த்தேன் என்றால் சரிதான். நான் படித்து புரிந்து கொண்ட பின்பு கிரைய பெற்றேன் என்றால் சரிதான். கிரைய ஆவணம் பக்கம் 2 ல் எனக்கு விற்பனை செய்தவர் அனுபவத்தில் இருந்து பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்சொன்ன அனுபவத்திற்கு ஏதேனும் ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை. மேற்சொன்ன ஆவணத்தில்சாட்சி கையொப்பம் யார் இட்டுள்ளார் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. மந்திரியப்பன் மகன் செல்லமுத்து என்பவர் சாட்சி கையொப்பம்இட்டுள்ளார் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. செல்வராஜ் மகன் கருப்பசாமி என்பவர் முன்னிலையில் தான் கையொப்பம் பெற்றேன் என்றால் சரியல்ல. எனக்கு

தெரிந்த அறிமுகமான சாட்சிகள் செல்லமுத்து, த/பெ.மந்திரியப்பன், செல்வராஜ், த/பெ.கருப்பசாமி அவர்கள் முன்னிலையில் சாட்சி கையொப்பம் வா.சா.ஆ.6 ஆவணத்தில் இட்டார்கள் என்றால் ஞாபகம் இல்லை. மேற்சொன்ன ஆவணத்தில் போடப்பட்டுள்ள கையொப்பத்தை வழக்குக்காக ஞாபகம் இல்லை என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 தாக்கல் செய்துள்ள வரி ரசீதில் கருப்பசாமி கவுண்டர் என்று மட்டும் போடப்பட்டுள்ளது அவரின் தகப்பனார் பெயர் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.5 தாக்கல் செய்துள்ள வரி ரசீதில் மந்திரியப்ப கவுண்டர் என்று மட்டும் போடப்பட்டுள்ளது அவரின் தகப்பனார் பெயர் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மேற்சொன்ன இரண்டு ஆவணங்களுமே கருப்பசாமி கவுண்டர் மற்றும் மந்திரியப்ப கவுண்டர் செல்வாக்கை பயன்படுத்தி பெறப்பட்டது என்றால் அது அவர்களுடைய ரசீது அது பற்றி எனக்கு தெரியாது. பொதுவாக ரசீது பெறும்போது தகப்பனார் பெயர் போடப்பட்டுருக்கும் என்றால் சரிதான். மேற்சொன்ன ரசீது அவ்வாறு தகப்பனார் பெயர் இல்லாததால் சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆக தாக்கல் செய்துள்ள பழனியம்மாள் பெயரிலுள்ள ஆவணத்தின் சொத்து விவரத்தை தற்போது படித்து பார்க்க முடியுமா என்றால் எழுத்து கூட்டி தான் படிக்க முடியும். தாவா சொத்தை கிரையம் பெறுவதற்கு உண்டான ஒரிஜினல் மூல ஆவணத்தை பெறவில்லை. அதனுடைய சான்றிதழை வைத்து தான் வா.சா.ஆ.1 ஆக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்சொன்ன ஆவணத்தில் சொத்து விவரத்தில் தாராபுரம் தாலுக்கா, நந்தவன பாளையம் கிராமம், கா.சா.எண்.1488 ல் உள்ள 4.18 1/4 ஏக்கர் கருப்பசாமி மற்றும் மந்திரியப்ப கவுண்டருக்கு 1/3 பங்கு உள்ளது என்றால் சரிதான். நான் 27.02.2019 என்னுடைய குறுக்கு விசாரணையில் பக்கம் 3 ல் 6 வது வரியில் கூறியுள்ள சங்கதிகள் பி.வா.சா.ஆ.1, தாராபுரம் தாலுக்கா, நந்தவனபாளையம் கிராமத்தில் கா.சா.எண்.1488 புஞ்சை ஏக்கர் 12.55, இதில் பொதுவாக 4.18 1/4 ஏக்கர் பூமியும் மாவடை, மரவடை சகிதமும் என குறிப்பிடப்பட்டுள்ளது என்று கூறியுள்ளேன் என்றால் அந்த பூமி இருக்கிற விவரம் எனக்கு தெரியும். கா.சா.எண்கள் எனக்கு தெரியாது. தாவாசொத்தில் உள்ள ஓட்டு வீடுகளை பற்றி குறிப்பிடவில்லை என்றால் அங்கு வீடு இல்லை. 16.04.2002 ல் இவ்வழக்கில் நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை பார்வையிட்டுள்ளார். அவர் தாக்கல் செய்த நீ.ம.சா.ஆ.1 ல் கட்டிடம் ஒன்று உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார் என்றால் நான் கிரையம் பெறும்போது மேற்படி தாவா சொத்தில் வீடு எதுவும் கிடையாது. ஆனால் கட்டிடம் இருந்தது. மேற்சொன்ன கட்டிடத்தில் தேவகி ஆங்கில பள்ளி என்ற பெயர் பலகை உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்தில் தேவகி ஆங்கில பள்ளி இருந்தது

என்றும், அதில் குழந்தைகள் படிக்கிறார்கள் என்றும், அந்த விவரத்தை மறைத்து நான் தாவா வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நீ.ம.சா.ஆ.1 ல் கட்டிடம் உள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது பற்றி எனக்கு தெரியாது. மேற்சொன்ன ஆவணத்தில் உள்ள அனைத்து சங்கதிகளும் எனக்கு தெரியும் என்றும், வழக்குக்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு நிலுவையில் உள்ள போதே தங்கவேல் என்பவர் தாவா சொத்தில் ஒரு பகுதியை கிரையம் பெற்றுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் தாக்கல் பிரமாணவாக்குமூலத்தில் 2 ம் வாதி நாச்சிமுத்து தனக்கு ஏற்பட்ட குடும்ப சூழ்நிலை காரணமாக தங்கவேல் சாமியை அணுகி அவர் பெயரில் பிரிக்கப்படாத சொத்தை 1ம் பிரதிவாதி பெயரில் விற்றுள்ளதாக கூறியுள்ளேன் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நாச்சிமுத்துக்கே விற்பதற்கு உரிமை இல்லை என்றும், மேற்படி சொத்த தங்கவேல் சாமி கிரையம் பெற்றது சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் பிரமாண வாக்குமூலத்தில் எனக்காகவும், நாச்சிமுத்துக்காகவும் தான் தாக்கல் செய்துள்ளளேன் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். ஆகையால் நாச்சிமுத்தின் சொத்து விவரம் மற்றும் குடும்ப விவரம் தெரியும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் கிரையம் வாங்கும்போது நாச்சிமுத்து என்னுடன் இருந்தார் என்றால் சரிதான். நாச்சிமுத்து விற்கும் போது எனக்கு தெரியும் என்றும் , நான் வழக்குக்கா பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி தர்மராஜ் மற்றும் சுப்பிரமணி தாவா சொத்தில் கம்பிவேலி போட எந்த தேதியில் முயற்சித்தார்கள் என்றால் அவர்கள் வரவில்லை. நான் என் பிரமாண வாககுமூலத்தில் கம்பிவேலி அமைத்து தாவா சொத்தை அமைப்பை மாற்ற முயற்சித்தார்கள் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. பிரமாண வாக்குமூலத்தில் 2ம் பிரதிவாதி சட்டத்திற்கு புறம்பாக மேற்சொன்ன விசயத்தை முயற்சித்தார்கள் என்று கூறியுள்ளேன் என்றால் அது பற்றி தெரியாது. பிரமாண வாக்குமூலம் நான் தான் தாக்கல் செய்துள்ளதால் எனக்கு எல்லா விவரமும் தெரியும் என்றும் வழக்குக்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. ஏற்கனவே நீதிமன்றத்தில் செல்லப்ப கவுண்டர் மக்கள் கருப்பசாமி கவுண்டர், மந்திரியப்ப கவுண்டர் , கந்தசாமி கவுண்டர் உள்ளார்கள் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். கருப்பசாமி கவுண்டர், மந்திரியப்ப கவுண்டர் , கந்தசாமி கவுண்டர் ஆகிய மூவரும் சகோதரர்கள் என்பது எனக்கு தெரியும் என்றால் தெரியும். ஆனால் கருப்பசாமி கவுண்டர், மந்திரியப்ப கவுண்டர் ஆகிய இருவர் மட்டும் எனக்கு தெரியும். மேற்சொன்ன மூவருக்கும் சின்னபுத்தூரில் வீடு உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்சொன்ன மூவரும் 22.10.1979 ல் பாக சாசனம் செய்து கொண்டது பற்றி

எனக்கு தெரியாது. வா.சா.ஆ.7 ல் காட்டப்படும் சொத்து சம்மந்தமாக தர்மராஜ் என்பவர் பொது அறிவிப்பு கொடுத்துள்ளார் என்பது பற்றி தெரியும் என்றால் அது பற்றி எனக்கு தெரியும். ஆனால் அது சரியா, தவறா என்று எனக்கு தெரியாது. மேற்படி அறிவிப்பு சம்மந்தமாக வாதிகள் தரப்பில் மறுப்பு அறிவிப்பு கொடுக்கப்பட்டுள்ளதா என்பது பற்றி எனக்கு ஞாபகம் இல்லை. தாவா சொத்தை நானும், நாச்சிமுத்து சேர்ந்து பிரிக்கப்படாத 1 1/2 ஏக்கர் பூமியை கிரையம் பெற்றோம் என்றால் சரிதான். மேற்சொன்ன கிரையம் செல்லத்தக்கது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் வாதிகளுக்கு 1/3 பாகம் வேண்டும் என்று பரிகாரம் கோரப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனக்கு பரிகாரம் எதுவும் கிடைக்கத்தக்கது அல்ல என்றும், ஏனென்றால் கிரையம் மோசடியாக செய்யப்பட்டது என்றால் அரசு ஆவணங்களை பரிசிலீத்து தான் கிரையம் பெற்றுள்ளேன். தாவா சொத்தை பட்டா பாஸ்புக், மூலபத்திர நகல், சொத்து வரி ரசீது ஆகியவற்றை பார்த்து தான் கிரையம் பெற்றேன். நான் தாராபுரம் சொத்து சம்மந்தமாக இந்த வழக்கில் எதுவும் சொல்லவில்லை என்றால் சரிதான்.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க தொடர் குறுக்குவிசாரணைக்காக ஒத்தி வைக்கப்பட்டது.